# கனிமொழி கருணாநிதி உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

மணிப்பூர் மாநில போலீஸ், மணிப்பூர் மாநில மகளிர் ஆணையம், தேசிய மகளிர் ஆணையம் என எல்லா அமைப்புகளும் மௌனமாக இந்த கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்த வீடியோ மட்டும் வெளியாகாமல் போயிருந்தால் இந்த கொடுமைகளை எல்லாம் ஒன்றுமே நடக்காதது போல் மூடி யிருப்பார்கள். அதிர்ஷ்டவசமாக அந்த வீடியோ வெளியானதால் உண்மை நிலவரம் தெரிய வந்தது.

அந்த வீடியோ வெளியான பிறகுதான் அந்த கும்பலில் இருந்த ஐந்து, ஆறு பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் அந்த பெண்ணை வன்முறை கும்பலிடமே பிடித்துக் கொடுத்த அந்த போலீஸ் காரர்கள் மீது இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஏன் இதுவரை எடுக்கவில்லை. நேற்றுவரை மணிப்பூர் அரசு இந்த விஷயத்தில் மௌனமாகத்தான் இருக்கிறது. எதையுமே செய்யவில்லை.

**மகாபாரத திரவுபதியும் மணிப்பூர் திரவுபதிகளும்!**

இங்கே பேசிய உறுப்பினர்கள் மகாபாரதத்தில் வரும் திரவுபதியை சுட்டிக் காட்டிப் பேசினார்கள். (குறுக்கீடு) மணிப்பூர் பெண்களும் அதேபோல தங்களைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டினார்கள். கடவுளும் உதவ வரவில்லை, அரசும் வரவில்லை. மகாபாரதத்தை ஒழுங்காக படித்தவர்களுக்கு தெரியும்... திரவுபதி விவகாரத்தில் குற்றம் செய்தவர்கள் மட்டுமல்ல, அதைப் பார்த்துக் கொண்டு மரம் போல நின்றிருந்தவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். மணிப்பூர் விவகாரத்தில் மட்டுமல்ல ஹத்வாஸ், உனாவ், பில்கிஸ் பானு, ஏன் சமீபத்தில் போராடிய மல்யுத்த வீராங்கனை விவகாரம் வரை மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தவர்களை இந்த தேசத்தின் தாய்மார்கள் நிச்சயம் தண்டிப்பார்கள்.

மணிப்பூரில் நூற்றுக்கணக்கான நிவாரண முகாம்கள் இருக்கின்றன. அவற்றில் உணவு இல்லை, தண்ணீர் இல்லை, ஒவ்வொரு முகாமிலும் அளவுக்கு அதிகமான மக்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், முறையான சுகாதார கழிவறை வசதி இல்லை. கூரைகள் ஒழுகுகின்றன. குழந்தைகள் பயத்திலும், பசியிலும் கதறிக் கொண்டிருக்கின்றன. இதற்குப் பெயர்தான் நிவாரண முகாம்களா? இன்னமும் நீங்கள் மக்களுக்கு என்ன அடிப்படைத் தேவை என்பதையே உணரவில்லை. உதவிகள் எதுவும் மக்களைச் சென்றடையவே இல்லை.

முகாமிலே ஒரு பெண், 'என் மகன் கொல்லப்பட்டதாக சொல்கிறார்கள். அவன் உடலை இதுவரை நான் பார்க்கவில்லை. அவன் கொல்லப்பட்டிருப்பான் என்று நான் நம்பவில்லை. என்னைப் பார்க்க என்றாவது ஒரு நாள் வருவான்' என்று நம்பிக்கையாக அந்தப் பெண்மணி காத்திருப்பதை எங்களால் பார்க்க முடிந்தது. இந்த ஒரு அம்மா மட்டுமல்ல... இவரைப் போன்ற ஏராளமான அம்மாக்கள் தங்கள் சகோதரரோ, கணவரோ, மகனோ திரும்பி வருவார்கள் என்கிற நம்பிக்கையில் இன்னமும் கண்ணீருடன் காத்திருக்கிறார்கள்.

**அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்!**

ஒரு முகாமிலே இருந்த ஒரு மெய்தீ இன பெண் என்னிடம், 'நீங்கள் எங்களைப் பார்க்க வருகிறீர்கள். ஆனால் மணிப்பூர் மாநில முதல்வரோ, பிரதமரோ ஏன் எங்களைப் பார்க்க வரவில்லை? நாங்கள் வீடிழந்து நிற்கிறோம், குடும்பத்தை இழந்திருக்கிறோம், வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறோம். எங்களுக்குப் பாதுகாப்பில்லை. எங்கள் கண்ணீரை ஏன் அவர்கள் துடைக்க வரவில்லை' என்று கேட்கிறாள்.

ஆனால் அவர்களின் கண்ணீரை கவனிக்காமல் பிஜேபி ஃபேக் நியூஸ் டீமோ, 'நாங்கள் பிரதமர் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம். நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?' என்று 'இந்தியா' டீமிடம் கேட்டதாக போலியான தகவல்களை உற்பத்தி செய்து பரப்பிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) உண்மை என்னவெனில் குக்கி, நாகா, மெய்தீ என எந்த இன மக்களாக இருந்தாலும் அவர்களின் கண்களில் விரக்தியும் வேதனையும் தான் தெரிகிறது.

நான் இந்த அரசிடமும் பிரதமரிடமும் வேண்டுவதெல்லாம், அந்த மக்களிடம் செல்லுங்கள், பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்று சொல்லுங்கள். இதைக் கூட உங்களால் செய்ய முடியாதா? அவர்கள் ரத்தம் வழிய வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசு உங்களோடு நிற்கிறதோ இல்லையோ நாங்கள், இந்தியா கூட்டணி உங்களோடு இருக்கிறோம் என்று அம்மக்களுக்கு அங்கு சென்ற நாங்கள் உறுதியளித்துள்ளோம்.

மணிப்பூர் முதல்வர் குக்கி இன மக்கள் போதைப் பயிர்களை சாகுபடி செய்வதாக குற்றம் சாட்டுகிறார். ஆனால் முன்னாள் எஸ்பி பிருந்தா இதை மறுத்து முதல்வர் அலுவலகம் மீது குற்றம் சாட்டுகிறார். திசை திருப்பும் கதைகள் நிறைய செய்தித்தாள்களில் அங்கே வெளிவந்திருக்கின்றன.

அம்மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்படும் உரங்கள் உணவுப் பயிர்க்கு பயன்படுத்தப்படாமல் வேறு எங்கோ சென்றுள்ளன. இதுகுறித்து முறையாக விசாரிக்கக் கூடாதா?

**கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**

நீங்கள் பதிய நாடாளுமன்றத்திற்கு செங்கோலைக் கொண்டு வந்து வைத்துள்ளீர்கள். சோழர்களின் செங்கோல் என்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை முறையாக அறியவில்லை. சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா? கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இந்தி திணிப்பதை விட்டுவிட்டு சிலப்பதிகாரத்தை ஒழுங்காக படியுங்கள். அது பல பாடங்களை உங்களுக்குக் கற்றுத் தரும்.

**எந்தப் பொறுப்பும் இல்லாத அரசு!**

ஒரு முக்கிய பிரச்சினை பற்றி எரியும் போதே அடுத்த இன்னொரு முக்கிய பிரச்சினை வந்து இந்த அரசை காப்பாற்றி விடுகிறது. ஒடிசாவில் மூன்று ரயில்கள் மோதிக் கொண்டு 288 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். அந்த விபத்தில் உயிரிழந்த சிலரின் உடல்கள் இன்னும் புவனேஸ்வரில் அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விபத்துக்குப் பின் நடந்த விசாரணையில் சிக்னல், தகவல் தொடர்பு துறையில் பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பது தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக இரு மாதங்களுக்கு முன்பாகவே அரசுக்கு எச்சரிக்கை விடப்பதாகவும் தெரிகிறது. ஆனால் இத்தனை பெரிய விபத்து ஏற்பட்ட பின்னரும் ரயில்வேயில் பாதுகாப்பு தொடர்பான பணியாளர்கள் பற்றாக்குறை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் இருக்கிறது. அந்த விபத்தில் இருந்து அரசு என்ன பொறுப்பை கற்றுக் கொண்டிருக்கிறது? விபத்தில் உயிரிழந்தவர்கள் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. புள்ளி விவரங்களை மறைக்கிறது. வெளியிட மறுக்கிறது. பொறுப்பற்ற அரசாக இருக்கிறது.

**பொய் பேசும் ஸ்மிருதி இரானி!**

அமைச்சர் ஸ்மிருதி இரானி சொல்கிறார், இந்தியா 100 சதவிகிதம் திறந்த வெளி மலம்கழித்தல் இல்லாத நாடாக இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் இந்தியாவில் ஒரே ஒரு மாநிலம் கூட அந்த இலக்கை அடையவில்லை. கூசாமல் பொய் சொல்கிறார் ஸ்மிருதி இரானி. வேலைவாய்ப்பு தொடர்பான புள்ளி விவரங்கள் தேர்தல் முடிவுகள் வந்ததில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிஷனில் இருந்து இருவர் ராஜினாமா செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

வேலைவாய்ப்பின்மை 8.5 சதவிகிதமாக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. முதலீடுகள் பாதியாகக் குறைந்துள்ளன. முறையான வேலை வாய்ப்பு இல்லாததால் மக்கள் விவசாயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். எந்த வளரும் நாட்டிலும் இது நடக்காது. தேசியக் கொள்கை காரணமாக ஆயிரமாயிரம் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, லட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் கல்வியை இழந்து வருகிறார்கள். அரசுப் பள்ளிகளை நாடும் ஓபிசி, எஸ்.சி.எஸ்,.டி. மாணவர்கள்தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். (குறுக்கீடு)

இதையெல்லாம் கேட்டால் இ.டி.யை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டுகிறீர்கள். எதிர்க்கட்சிகளை மட்டுமின்றி ஊடகங்களையும் நீங்கள் மிரட்டுகிறீர்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஊதியம் மாதம் 300 ரூபாய். உங்கள் அரசாங்கத்தில் விற்கும் ஒரு கிலோ தக்காளிதான் இந்த பணத்துக்கு வாங்க முடியும். இதுமட்டுமல்ல இந்த ஆட்சியில் பெண்களுக்கு எதிராக 26.3 சதவிகித குற்றச்சாட்டு உள்ளது.

மாநிலங்களவையில் ஒரு கேள்விக்கு இணை அமைச்சர் பதிலளிக்கையில் 25593 எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களின் மத்திய பல்கலைகழகத்தில் இருந்து நின்றுள்ளதாக கூறினார். இந்த லட்சணத்தில் உங்களை பாரதம் என்று பெருமையாக சொல்லிக் கொள்கிறீர்கள்.

உங்களை நீங்கள் தேசியவாதிகள் என்று அழைத்துக் கொள்கிறீர்கள். எங்களை தேசத்துக்கு எதிரானவர்கள் என்று கூறுகிறீர்கள். ஆனால் உண்மை என்னவெனில் மக்களை நீங்கள் மதிப்பதே இல்லை. மணிப்பூர் மக்கள் மீது, பெண்கள் மீது, குழந்தைகள் மீது உங்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது? தேசத்தின் அனைத்து மக்களையும் ஒன்றாக மதிக்கத் தெரியாத நீங்கள் தேசியவாதிகளா? இந்தியத் தாயை ஒவ்வொரு நாளும் ரணப்படுத்திக் கொண்டே இருக்கிறீர்கள். இந்தியா உங்களுக்கு பாடம் கற்றுத் தரும்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .மா.சுப்பிரமணியன் மேகாலயா மாநில சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர்.மேசல் அம்பரின் லிங்டோ ஆகியோர் நேற்று சென்னை, அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறையின் மூலம் அளிக்கப்பட்ட, உயிர் காக்கும் மயக்க மருத்துவம் , பேறுகால அவசர சிகிச்சை மற்றும் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் ஆகிய 6 மாதகால பயிற்சிகளை நிறைவு செய்த 29 மேகாலயா மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சி நிறைவு சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் முதன்மைச் செயலாளர் .ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், மேகாலாய மாநில சுகாதாரத் துறை அரசு முதன்மைச் செயலாளர். சம்பத்குமார், ஆணையாளர் மரு.ஜோரம் பேடா, , தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திரு.ராம்குமார், , தமிழ்நாடு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், மேகலாயா மாநில சுகாதாரத் துறை இயக்குநர் மரு.லிண்டம் மற்றும் மரு.அல்யா, அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.சுமதி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## டெல்லி சேவைகள் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்!

# இன்று டெல்லி அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு இருக்கிறது. நாளை?

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஆக. 10-

டெல்லி ஆட்சி அதிகாரத்தை பறிக்கும் வகையிலும், மக்களாட்சியின் மாண்பை சீர்குலைக்கும் வகையிலும் ஒன்றிய அரசால் டெல்லி சேவைகள் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்று டெல்லி அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு இருக்கிறது. நாளை? என்று குறிப்பிட்டு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது வருமாறு:-

யாருக்கு அதிகாரம்?. இந்த கேள்வி தான் இன்று டெல்லி ஆட்சி அதிகாரத்தை பறிக்கும் வகையில், மக்களாட்சியின் மாண்பை சீர்குலைக்கும் வகையில், ஒன்றிய அரசால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் சேவைகள் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வைத்து இருக்கிறது. இத்தனைக்கும் டெல்லியில் ஆட்சி அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்குத்தான் உண்டு என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்த பிறகும், அந்த தீர்ப்பை கொஞ்சம் கூட மதிக்காமல், அவசர கதியில் அவசர சட்டம் நிறைவேற்றிவிட்டு, இப்போது டெல்லி சேவைகள் மசோதாவை நாடாளுமன்றத்தில் தனக்கு உள்ள பெரும்பான்மை மூலம் நிறைவேற்றி மகிழ்ந்து இருக்கிறது ஒன்றிய பா.ஜ அரசு. டெல்லி என்ற ஒரு யூனியன் பிரதேசத்திற்கு எதிராக ஏன் இத்தனை வேகமாக ஒன்றிய அரசு செயல்படுகிறது என்று பார்த்தால் அத்தனையும் அதிர்ச்சி ரகம்.

2013 டிசம்பர் 8ம் தேதி முதல் டெல்லி முதல்வர் பதவியில் இருந்து வருகிறார் ஆம் ஆத்மி நிறுவனர் கெஜ்ரிவால். 2014 பிப்ரவரி 14ம் தேதி முதல் 2015 பிப்ரவரி 14 வரை இடையில் ஒருவருடம் ஜனாதிபதி ஆட்சி. அதன்பிறகு நடந்த தேர்தலிலும் கெஜ்ரிவால் கட்சி தான் ஆட்சியை பிடித்தது. அங்கு மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட வேண்டும் என்பது பா.ஜ.




வின் கனவு. ஆனால் 1998ம் ஆண்டுக்கு பிறகு டெல்லி மக்கள் பா.ஜ.,வை அங்கீகரிக்கவில்லை.

2014, 2019 எம்.பி. தேர்தலில் டெல்லியில் உள்ள 7 இடங்களையும் பா.ஜ., தான் கைப்பற்றியது. ஆனால் 15 வருடம் தொடர்ந்து அவர்கள் ஆட்சி புரிந்த டெல்லி மாநகராட்சியை இந்த முறை ஆம் ஆத்மி பறித்துக்கொண்டது. அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலிலும் முன்பு போல் 7க்கு 7 தொகுதிகள் பா.ஜ.வுக்கு கிடைப்பது சந்தேகம்தான் என்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் டெல்லி ஆட்சி அதிகாரத்திற்குள் ஒன்றிய அரசை கெஜ்ரிவால் ஒரு போதும் அனுமதிப்பது இல்லை. இதனால் எழுந்த கோபம் தான் தற்போது டெல்லி ஆட்சி அதிகாரத்தை கெஜ்ரிவாலிடம் இருந்து பறித்துக்கொள்ளும் நடவடிக்கையை டெல்லி சேவைகள் மசோதா மூலம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றி இருக்கிறது ஒன்றிய பா.ஜ., அரசு. நாட்டின் தலைநகர் என்பதால் ஐ.பி.எஸ். அதிகாரிகள் டெல்லி அரசின் கட்டுப்பாட்டிற்குள் வர மாட்டார்கள். அதனால் டெல்லியில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பணி ஒன்றிய உள்துறை அமைச்சகத்திடம் சென்றுவிடும்.

இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் டெல்லி அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரமாட்டார்கள். அப்படியானால் டெல்லி மாநகராட்சி அதிகாரத்தை விட டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலின் அதிகாரம் குறைக்கப்பட்டு விடும். டெல்லி சட்டப்பேரவைக்கு எந்தவித மதிப்பும் இல்லை. ஆனால் ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் துணை நிலை ஆளுநர், சட்டப்பேரவையை விடவும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசை விடவும், அமைச்சரவையை விடவும் அதிக அதிகாரம் பொருந்தியவர் ஆகிறார். மக்களாட்சி ஜனநாயகத்தை சீர்குலைக்கும் இந்த நடவடிக்கையை அ.தி.மு.க., ஆந்திர முதல்வர் ஜெகனின் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் பிஜூ ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரவு அளித்து உள்ளன. அதனால் 29 வாக்கு வித்தியா சத்தில் மசோதா நிறைவேறி இருக்கிறது. இன்று டெல்லி அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு இருக்கிறது. நாளை?

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

## தமிழினத் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளை "முரசொலி" ஏடு 82 ஆம் ஆண்டில் (10.08.1942) தடம் பதிப்பதற்கு வாழ்த்துகள்!

தில்லை சிதம்பரத்தில்
நடந்த வருணாசிரம
மாநாட்டைக் கண்டித்து
1944 ஆம் ஆண்டு அக்டோபர்
5 ஆம் நாள் முரசொலி துண்டு
அறிக்கை கலைஞர் அவர்கள்,
" சேரன் "என்ற புனைப்
பெயரில்
வருணமா ? மானமா ?
என்ற தலைப்பில்
வெளியிடப்பட்டது.

அந்த துண்டறிக்கையில்
வரும் பாடல் வரிகள்...
"வருணமா ? மானமா ? "

பரணி பல பாடிப் பாங்குடன்
வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமிலாச்
சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட
வகையின்றிக்
கருணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலும்
மானம் காக்க
மரத் தமிழா ! போராடு !!

வருணாசிரமம் வீழ்க !

....இப்படித் தமிழினத்
தலைவரால் தொடங்கப்
பட்ட, " இன்றைய செய்தி
நாளைய வரலாறு " என்று
காலம் மெய்ப்பித்துக்
கொண்டிருக்கும்
முரசொலி ஏடு

இன்று 82 ஆம் ஆண்டில்
தடம் பதிப்பது கண்டு
பேருவகை கொள்கிறோம்.

" காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்; இந்தப்
பாரிடைத் துயிலவோர்
கண்ணின்
பாய்ந்தோடும் எழுச்சி
நீ தான் !
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப்
பெண்ணே !

அறிஞர்தம் இதய ஓடை
ஆளநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள்
தீர்த்துக்
குவலயம் ஓங்கச்
செய்வாய் !
நறுமணம் இதழ் பெண்ண!

என்ற புரட்சிக்கவிஞரின்
பாடல் வரிகளுக்கு
இலக்கியமாக திகழும்

" முரசொலி நாளிதழ்"
நூறாண்டு ஆயிரம் ஆண்டு
வளர்க ! வளர்க !!
வாழ்க ! வாழ்க !!

**கேவிஆர்**
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம், மதுரை.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வரும் 14.08.2023 திங்கட்கிழமை, காலை 10.00 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள, "கழக அலுவலகத்தில்", எனது தலைமையில் மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி, மாணவர் அணி இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில், மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

2) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 9.8.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளான 7.8.2023 அன்று சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் –அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சைதை கிழக்கு பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி செயலாளரும் 13வது மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் அலங்கரிக்கப்பட்ட கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கி மரியாதை செலுத்தினார். உடன் பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன், மாவட்டப் பிரதிநிதிகள் வே.முருகன், க.உமாபதி, வட்ட நிர்வாகிகள் ஆர்.ரவிமூர்த்தி, ச.ராஜேந்திரன், எஸ்.ஆசிக்அலி, பி.பி. நாகராஜ், ஜி.குணசேகர் , மு.செல்வம், எம்.அப்துல்ரஹ்மான், க.யுவராஜ் , ச.ராஜசேகர், எம்.ஆர்.சி.ஆனந்த், எம்.ஆர்.சி. ஜெயராமன், ஒய்.சுசிலா உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் மலர் தூவி வணங்கினர்.

## வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கூறினர்!

புதுக்கோட்டை ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி மற்றும் குமார் ஆகியோரை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 08.08.2023 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அதனைத்தொடர்ந்து, வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, திருமலை ஆகியோர்களின் வாரிசுதாரர்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் தஐ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களிடம் எஸ். ரகுபதி ஆறுதல் கூறி, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அவர்களுக்கு உயர்தரத்திலான சிகிச்சையினை மேற்கொள்ளவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அரசு மருத்தவக்கல்லூரி முதல்வர் (பொ) மருத்துவர் ராஜ்மோகன், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஆசெந்தில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. மற்றும் கழக மாநில மீனவர் அணி சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி கே.வி.குப்பத்தில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கே.பி. சொக்கலிங்கம், வி.இராமநாதன், இரா.முருகேசன், எம்.எல்.நாகலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.